Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.14/2025**

Preliminary Register

Deposition of **PW- 8 LW-8**

| Name | : | பொன்னியின் செல்வன் | Father Name | : | அரங்கநாதன் |
|---|---|---|---|---|---|
| Village | : | வடுவூர் | Taluk | : | நீடாமங்களம் |
| Caste | : | | Calling | : | காவல் உதவி ஆய்வாளர்- திருச்சிற்றம்பலம் காவல் நிலையம் |
| Religion | : | | Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of February 2026.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் தற்போது திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.08.2024ம் தேதி நான் வலங்கைமான் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தமிழ்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 407/2024 ச/பி. 296, 131, 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று

சாட்சிகள் சர்குணம் மற்றும் குரு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.த.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் தமிழ்செல்வி, அறிவழகன், ரவி, ஜெகநாதன், சக்திவேல் பார்வை மகசர் சாட்சிகள் சர்குணம் மற்றும் குரு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 296, 131, 351(3) BNS விலிருந்து 49, 296, 131, 351(3) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அனுப்பிவைத்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவம் உண்மையென்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி கமல் என்கிற கமலசேகரன் என்பவரை ராஜேந்திரநல்லூர் பெரிய தெருவில் அவரது வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தவரை அன்றைய தினமே மதியம் 12.30 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கின் மற்றொரு எதிரி வாசு என்பவரை ஆலங்குடி ஆர்ச் அருகே நின்றுகொண்டிருந்தவரை 26.08.2024 மதியம் 01.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் என்னுடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 1 வது எதிரி மீது ச/பி. 49, 296, 131, 351(3) BNS வின் கீழும், 2வது எதிரி மீது மீது ச/பி. 49 BNS வின் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் குற்ற நிகழ்வு நாள் என்பது 24.08.2024 இரவு 10.00 மணி என்று முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள் 25.08.2024 காலை 10.00 என்று உள்ளது என்றால் சரிதான்.

சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். காலதாமதமாக புகார் பெற்றதற்கான காரணங்கள் குறித்து எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலோ அல்லது வாக்குமூலத்திலோ சாட்சிகள் யாரும் சம்பவயிடத்தில் இருந்ததாகவோ, சம்பவத்தை பார்த்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் புகார்தாரர் தனக்கு எந்த உறவுமுறை என்று கூறவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் கண்டுள்ள நபர்கள் யாரையும் நான் சாட்சியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1ஐ எத்தனை முறை விசாரணை செய்தீர்கள் என்றால் இருமுறை விசாரித்தேன். கடந்த 26.08.2024 அன்று இரண்டாவது முறையாக அ.சா.1 ஐ விசாரணை செய்தேன் என்றால் சரிதான். மேற்படி விசாணையில் அ.சா.1, 2வது எதிரி வாசு குறித்து எதுவும் கூறியதாக வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான் ஆனால் விசாரணையில் குறிப்பிட்டார்கள். விசாரணையில் குறிப்பிட்டார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற சாட்சிகள் யாரும் இவ்வழக்கின் 2வது எதிரியை குறித்து வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா. 1 தனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ போலீசார் சம்பவத்தன்று இரவு 12.00 மணிக்கு வந்துவிட்டார்கள் என்றும் அச்சமயத்தில் போலீசாரிடம் சம்பவம் குறித்து விபரம் கூறினேன் என்று எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 தனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ, "பக்கத்தில் உள்ள எனது பங்காளி வீட்டு பேரன் குரு ஆஜர் எதிரி கமலிடம் யாரைதான் பேசுகிறாய் என்று கேட்டார். அதற்கு ஆஜர் 1வது எதிரி கமல் இவளைத்தான் திட்டுகிறேன் என்று என்னை காண்பித்து செல்வியைத்தான் திட்டுகிறேன் என்று சொன்னார். எதிரி கமல் கையில் கத்தியை வைத்துக்கொண்டு கத்தியை காண்பித்து எனது கணவரை அறுத்து போட்டதுபோல் என்னையும் அறுத்து போட்டுவிடுவேன் என்று சொன்னார்." என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 அறிவழகன் எனது விசாரணையில் " அ.சா.1 ன் வீட்டு வாசலில்

சத்தம் கேட்டது . நான் உடனே என்னடா அண்ணன் வீட்டு வாசலில் சத்தம் கேட்கிறதே என்று அ.சா.1ன் வீட்டுக்கு சென்றேன்" என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 அறிவழகன் எனது விசாரணையில் நான் ஆஜர் எதிரியை பார்த்தபோது ஏம்பா இத்தனை மணிக்கு உனக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டேன். அ.சா.1 இடமும் இவருக்கு என்ன பிரச்சனை ஏன் நம்ம வீட்டு வாசலில் நின்று சத்தம் போடுகிறார் என்று கேட்டேன். அதற்கு அ.சா.1 என்னிடம் உங்கள் அண்ணன் கொலை செய்யப்பட்டு இறந்த வழக்கில் நான் சாட்சி அளித்து விட்டு வந்தது குறித்து ஆஜர் எதிரி தன்னை பேசுவதாக சொன்னார். மேற்கண்டவாறு அ.சா.1 என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1வது எதிரி உன் புருசனை அனுப்புன இடத்துக்கே உன்னையும் அனுப்பினால் தான் சரிவருவாய் என்று அ.சா.1 ஐ பார்த்து கூறினார். உடனே நான் ஆஜர் 1 வது எதிரியை உனக்கு என்னையா பிரச்சனை என்று சத்தம் போட்டேன். ஆஜர் 1 வது எதிரி மீண்டும் அ.சா.1 யிடம் பிரச்சனை செய்யும் நோக்கிலேயே நடந்து கொண்டார். நான் ஆஜர் 1வது எதிரியை அங்கிருந்து கையால் தள்ளிய போது ஆஜர் 1வது எதிரி எனது அண்ணி அ.சா.1 ஐ கண்ணத்தில் அறைந்துவிட்டார். அருகில் இருந்த ஜகந்நாதன், ரவி மற்றும் சக்திவேல் மூவரும் ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து இழுத்து அனுப்ப முயற்சி செய்தார்கள். ஆஜர் 1 வது எதிரி அப்போது எனது அண்ணியை கத்தியை எடுத்து குத்த வந்தார். அதற்குள் ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள்", என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.4 சக்திவேல் எனது விசாரணையில், " ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நானும் எனது தாத்தா அ.சா.3ம் ஆஜர் 1 வது எதிரி சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை தடுத்தோம். அப்போது ஆஜர் 1 வது எதிரி என் Case க்கு சாட்சி சொல்ல போனால் உன் புருசனை போட்டது போல் உன்னையும் போட்டு விடுவேன் என்று அ.சா.1 யிடம் சொன்னார். பேசிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1 வது எதிரி அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்துவிட்டார்", என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.6 சர்குணம் எனது விசாரணையில், " கடந்த 24.08.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் எங்கள் ஊரிலுள்ள கோவிலில் இருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 வீட்டு

வாசலில் நின்றுகொண்டு அ.சா.1 ஐ குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். மேலும் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ வாடி போடி என்று பேசியும் அடித்தும் விட்டார். ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 பார்த்து உன் புருசனை கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று சொன்னார். நான் ஆஜர் 1வது எதிரியை போ தம்பி என்று சொல்லி அனுப்பி வைத்தேன். அப்போது ஆஜர் 1வது எதிரியின் தம்பி ஆனந்தராஜ் என்பவரும் ஆஜர் 1 வது எதிரியின் மனைவியும் சம்பவயிடத்திற்கு வந்து ஆஜர் 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள்" என்று கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு பதியப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து இவ்வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணம் அ.சா.1 கொடுத்த பொய்புகாரின் மீது எவ்வித விசாரணையும் செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.05 17:33:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.